கல்லாலங்குடி கிராம ஸேவா சங்கம்.

29—8—47ஃ மாலை 3-மணிக்கு ஆலங்குடியையடுத்த கல்லாலங்குடி கிராமத்தில் பொது மக்களின் கூட்டம் ஒன்று நடந்தது. முதல் மந்திரி ஸ்ரீமான் V. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். அன்னவாசல் ஸ்ரீமான் ஆறுமுகம் செட்டியார், M. L. C. அவர்களும், ஆலங்குடி ஜனுப் இப்ராம்சா ராவுத்தர், M. L. C. அவர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் A. V. S. மணி அய்யர் அவர்கள், மந்திரியவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக்கொடுத்தார். கூட்டமானது கிராமத்தின் பொதுநல அபிவிருத்திக்காக கிராம ஸேவா சங்கம் ஒன்று நிறுவும் நோக்கத்துடன் கூட்டப்பட்டதென்றும், அதற்கு அரசாங்க ஆதரவு விசேஷமாகவேண்டுமென்றும் பிரார்த்தித்தார். தலைவர் முன்னுரையில் கிராமவாசிகள் இத்தகைய சங்கத்தை ஏற்படுத்துவதன்மூலம் நல்ல பலன்களை அடைவாரென்று கூறி, அதற்குத் தாம் இயன்ற சலுகை காட்டுவதாயும் உறுதி கூறினர். பிறகு விவசாய இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் துரைஸ்வாமி அய்யங்கார் அவர்கள் நவீன விவசாய முறைகளைக் கையாளுவதின் பலனை விவரித்து ஆடி உழுதல், சிக்கனமாக விதைத்தல், எரு வகைகள், சிக்கன நீர்ப்பாசனம் முதலியவற்றைப்பற்றி ஒரு சொற்பொழிவு செய்தார். அவருக்குப்பின் பேசிய கிராம அபிவிருத்தி ஆபீஸர் ஸ்ரீமான் G. வெங்கடேசன் அவர்கள் கிராம சுகாதாரம், ஒற்றுமையாகக் கிராமப் பொதுக் காரியங்களில் ஈடுபடுதல், கல்வியபிவிருத்தி ஓழிந்த நேரங்களில் கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், கறிகாய்த் தோட்டங்கள் முதலிய பயன்தரும் பொழுதுபோக்குகளும், குடிசைத் தொழில்களும் வளர்வதன்மூலம், கிராமவாசிகள் உப சம்பாத்தியம் செய்ய வழிகள் தேடவேண்டுமென்றும் எடுத்துரைத்தார். மந்திரியவர்கள் மீண்டும் பேசுகையில் உபந்நியாஸகர்கள் கூறிய முறைகளைக் கைக்கொண்டு சங்கம் ஒத்துழைத்து, கிராமத்தின் க்ஷேமத்தைப் பெருக்கவேண்டுமென்று கூறிமுடித்தார். சிறிது சங்கீதம் நடந்தபின் வந்தேமாதரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

* * * *

ஆகஸ்டு மாதம் 15-ம்தேதி சுதந்திர தினக் காலைப்போதிலே கணேச நகரில் வானளாவிய கொடிமரம் நிறுவி, இயற்கை இல்லம் தலைவர் கி. லெக்ஷ்மண சர்மா கொடியேற்றிவைத்தார். கொடி மரத்தின் பீடத்தை ஒரு சிறிய கோவிலாக அமைத்து, அதில் ஒரு விநயகரை பிரதிஷ்டை செய்து அவருக்கு சுதந்திர விநயகர் என்ற பெயரும் சூட்டப்பட்டது. கொடியேற்று வைபவத்தை அடுத்து ஒரு கூட்டமும், அதன் பின்னர் குழந்தைகளுக்கு பண்டமும், பெண்களுக்கு மங்களப் பொருள்களும் வழங்குதல் நடைபெற்றது.

"இந்திய யூனியனுடன் ஸமஸ்தானங்களின் சேர்க்கை."

நமது ஸமஸ்தானம் இந்திய யூனியனில் சேர்ந்துவிட்டது. ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் சேர்க்கைப்பத்திரத்தில் கையொப்பமிட்டார்கள். தாத்காலீக உடன்படிக்கையில் திவான் அவர்கள் கையொப்பமிட்டார்கள். அவைகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு பிரதிகளுண்டு. ஒரு பிரதி யூனியன் வசமிருக்கும். மற்றொன்று ஸமஸ்தானம் யூனியனில் சேர்ந்ததை அங்கீகரித்ததின் அடையாளமாக ராஜீயக் காரியதரிசியால் கையொப்பமிடப்பட்டு ஸமஸ்தானத்திற்கு அனுப்பப்படும்.

அநேகமாக எல்லா ஸமஸ்தானங்களும் யூனியனில் சேர்ந்துவிட்டன. அப்படி அவைகள் சேர்ந்ததானது சுமார் 20 வருஷங்களாக நாம் கொண்டிருந்த லக்ஷியத்தைப் பூர்த்தி செய்ததாக ஆகும். அவ்வித லக்ஷியமானது 20 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாய்க்கொண்டிருந்த லக்ஷியமென்றுகூடச் சொல்லலாம். ஏனென்றால் மாண்டேக்—செம்ஸ்போர்ட் சீர்திருத்த காலத்திலேயே இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்க ஸமஸ்தானங்கள் உள்பட எல்லா மாகாணங்களும் சேர்ந்த ஓர் ஐக்கியமே சரியான மார்க்கமென்று சொல்லப்பட்டது.

இந்திய அரசியல் போக்கைக் கவனித்துவந்தவர்களுக்கு சுதேச மன்னர்கள் யூனியனில் சேரத் தீர்மானம் செய்தது ஆச்சரியமாக இராது. மொத்தத்தில் மன்னர்கள் எல்லோருமே இந்திய யூனியனில் நம்பிக்கையுள்ளவர்கள். அவர்கள் பலமான மத்திய ஸ்தாபனத்துடன் கூடிய ஓர் உண்மை ஐக்கியம் வேண்டுமென்று நினைத்தார்கள். லண்டனுக்குக் கீழ்ப்பட்டில்லாத ஓர் போலி யூனியனில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. நல்ல யூனியன் ஏற்படுமென்ற நம்பிக்கை வந்தமேல் சுதேச மன்னர்கள் அதில் சேர்வது சுலபமாகிவிட்டது. 1935-ம் வருஷத்தில் ஏற்பட்டபடி இந்திய அரசியல் திட்டத்திற்கு இது ஓர் அடிப்படை. ஆகையால் தான் சென்ற ஜூலை மாதத்தில் சில ஸமஸ்தானங்கள் யூனியனில் சேரும் விஷயமாகக் கொஞ்சம் இருள்கள் ஏற்பட்டுவிட்டதென்று கேட்க மனதிற்கோர்விதமான கலக்கமேற்பட்டது. இந்தியா பிளவுபடுமோவென்ற ஓர் பீதி ஏற்பட்டது. வைஸ்ராய் அவர்கள் தலையிட்டதாலும், சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் சொன்ன வார்த்தைகளாலும் அந்த விபத்து தடைப்பட்டது. மேகங்கள் விலகின ; சூரியனுடைய வெளிச்சம் தெரிந்தது.

இது எதிர்பாராததல்ல. சுதேச மன்னர்கள் விஷயம் தெரிந்தவர்கள். அரசியல் முறைகள் அவர்கள் ரத்தத்திலேயே ஊரியிருக்கிறது. காலதேச வர்த்தமானத்தையொத்து நடக்கும் சக்தியுடையவர்கள். தங்கள் வம்சத்தார்களின் அக்கரைக்கும், தேச அபிமானத்திற்கும் யாதொரு முரணும் கிடையாதென்பது அவர்களுக்குத் தெரியும். பரந்த நோக்கத்துடன்கூடிய சுயநலமும் இவைகளுக்கு விரோதமில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

யூனியனுடன் சேர்ந்தால் பல நன்மைகள் ஏற்பட இடமுண்டு. ஸமஸ்தானங்களுக்கு இனிமேல் ஒரு கை முழம் போடுவதென்ற சிரமம் கிடையாது. இனிமேல் தேசத்தின் எதிர்கால நிலைமையைச் சரியான வழியில் கொண்டுபோகும் விஷயத்தில் இவர்களும் சம்பந்தப்பட இடமிருக்கிறது. இவர்களுடைய பிரதிநிதிகள் யூனியன் சட்ட சபையில் கலந்துகொண்டு கொள்கைகளும், திட்டங்களும் ஏற்படுத்துவதில் பங்கெடுத்துக்கொள்ளலாம். இந்தப் பாத்தியதைக்குப் பிரதிப்பிரயோஜனமாக இவர்கள் தருவதென்னவென்றால் போக்குவரத்து, தேசப் பாதுகாப்பு, அயல் நாட்டு விஷயங்கள் என்ற மூன்று இலாக்காக்களிலும் தங்கள் பாத்தியதையை யூனியனுக்கு விட்டுக்கொடுப்பதுதான். யூனியனுடனும், மற்ற ஸமஸ்தானங்களுடனும் சமமில்லாமல் தனிமையில் வேலை செய்கிறோமென்று சொல்லும் ஸமஸ்தானத்தால், இவ்விலாகாக்களில் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் யூனியனுடன் சேர்ந்து இருப்பதின் பயனாக இவ்விலாக்காக் காரியங்களில் அவர்கள் நல்ல பங்கெடுத்துக்கொள்ளலாம்.

மேலே சொன்ன மூன்று இலாகாக்கள் நீங்கலாக ஸமஸ்தானங்களின் உள்நாட்டு ஆக்ஷியில் எவ்விதத்திலும் யூனியன் தலையிடாது. சேர்க்கைப் பத்திரத்தில் சுதேச மன்னர்கள் மேற்கண்ட மூன்று இலாகாக்கள் சம்பந்தமாக யூனியன் செய்யும் தீர்மானங்களை, தங்கள் ஸமஸ்தானங்களில் அமுலுக்குக் கொண்டுவரும் கடமையை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். வேண்டிய வசதிகளிருக்கும் ஸமஸ்தானங்களில் அக்காரியங்களை அவர்களே நடத்தலாம்; இவ்வித வசதிகள் பல ஸமஸ்தானங்களிலிருக்கின்றன.

மேற்கொண்டும் ஸமஸ்தானங்களுககுப் பிரயோஜனங்களுமுண்டு. பல சாமான்களுக்கு ஸமஸ்தானங்கள் இப்பொழுது வரி கொடுத்துவருகிறார்கள். ஆயினும் அவ்வித வரிகள் விதிப்பதில் அவர்களுக்கு யாதொரு அதிகாரமுமில்லை. யூனியன் சட்ட சபையில் சேர்ந்ததின் பயனாக வரிகள் போடுவதிலும், திட்டங்கள் ஏற்படுத்துவதிலும் ஸமஸ்தானங்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவர்களுக்கிடமுண்டு. சேர்க்கையின் பயனாக ஸமஸ்தானங்கள் இந்தியாவின் அரசியலமைப்பில் பிணைந்துவிட்டார்கள். இதனால் இந்தியா பெருமையுடன் உலக காரியங்களில் முன்வந்து நிற்கலாம். ஸமஸ்தானங்களுக்கும் பெருமை அதிகரிக்கிறது. இதனால் ஏற்படும் பலன்களும் ஸமஸ்தானங்களுக்கு மட்டுமில்லை. ஸமஸ்தானங்களால் யூனியனுக்கும் குணமுண்டு. பல ஸமஸ்தானங்களில் ஒழுங்கான நிர்வாகம் வெகு நாட்களாக நடந்துவருகிறது. ஐக்கிய இந்தியாவின் ஆலோசனைகளில் ஸமஸ்தானங்களும் நல்லவிதமான யோசனைகள் சொல்ல சந்தர்ப்பமேற்படும். கொஞ்சம் பின்வாங்கி நடக்கும் ஸமஸ்தானங்களும் முன்னுக்குவர இடமுண்டு. இது வேட்டைக்குச் சமானம். நாடோடியாகச் சொல்வதானால் Mr. பால்ட்வின் காமன்ஸ் சபையில் ஓர் லண்டன்வாசியின் அபிப்பிராயத்தை அவர் வாய்மொழியாகச் சொன்ன வார்த்தைகளில் சொல்லலாம். அதாவது, "ஐயா! வேட்டை ஆடுவதில் ஓர் அழகுண்டு. சாதாரணமாகச் சேராத ஜனங்கள் சேர்வதற்கு இது சந்தர்ப்பம் கொடுக்கிறது" என்றார்.

ஆவூர் அர்ச். பெரியநாயகி ஆண்டவள் திருக்கோவிலின்

இரண்டாம் நூற்றுண்டின்

விழாவின்போது புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் மேன்மைதங்கிய

ராஜ ராஜகோபாலத்தொண்டமான் பகதூர் அவர்களுக்கு

அளித்த

வாழ்த்துப் பத்திரம்.

மாட்சிமிக்க மன்னர்பிரான் அவர்களே !

இந்நாள் ஆவூர் பங்கினைச் சேர்ந்தவர்களும் இப்பகுதிகளில் வாழ்பவருமான ரோமான் கத்தோலிக் மக்களாகிய எமக்கு ஒரு பொன்னாளாகும். 17-ம் நூற்றுண்டின் இறுதியில் முதல்முதல் தென்னிந்தியாவில் " அர்ச். பெரியநாயகி ஆண்டவளின் " தோத்திரத்திற்காக, சிறப்பிற்குரிய இப்பங்குத் தேவாலயம் நிர்மாணிக்கப்பெற்று இவ்வமையம் 200 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இது மதுரை மிஷன் ஞான ஆளுகைக்குட்பட்டிருந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில் சேசு சபையாரால் கட்டப்பட்ட முதல் புராதின தேவாலயம். சரித்திரத் தொன்மையும், தொன்றுதொட்டுவரும் புகழும் வாய்ந்த, இந்த ஆலயத்தின் மகிமை அளவிட்டுரைக்குந்தரமுடையதன்று ! இந்த இருநூறு ஆண்டுகளாகத் தேவ அன்னை தமது திருக்குமாரனிடமிருந்து பெற்றுப் பொழிந்த அருள் மாரிக்காக எமது ஏகோபித்த நன்றியை இம்மகத்தான நல்விழாவில் பகிரங்கமாக புலப்படுத்திக்கொள்வது எமது பிரதான கடமையாகக்கொள்கின்றோம்.

குடிதழீக்கோலோச்சும் கோற்றவ !

இந்த ஆலயத்திற்கும் தங்கள் சமஸ்தானத்திற்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு மிகுதியும் பேணிப் போற்றுதற்குரிய தொன்று. புதுக்கோட்டை சமஸ்தானமும் ஆவூர் தேவாலயமும் ஏககாலத்தில் ஏற்பட்டவை என்பது சரித்திரங் கூறும் உண்மை. 1686-ம் ஆண்டில் புதுக்கோட்டை மகாராஜா இராஜ ரகுநாதராய தொண்டைமான் அவர்களுடைய பட்டாபிஷேக நாளிலிருந்தே இந்த ஊர் பங்கு நிலையமாகும். (Mission Centre) பெருமை பெற்றிருக்கிறது. 1711, 1827, 1834, 1850 ஆகிய இவ்வாண்டுகளில் புதுக்கோட்டை தொண்டைமான் மகாராஜாக்களாகிய, மதிப்புக்குரிய தங்கள் முன்னோர்கள் இவ்வாலயத்தை தரிசித்து நன்கொடை அளித்திருக்கின்றார்கள். தங்கள் மகத்வமிக்க மரபின் மாணிக்கங்களாகத் திகழ்ந்த பூர்வதொண்டைமான் மன்னர்கள், என்றும் எங்கள் பால், கருணையுடையவர்களாகவே இருந்திருக்கின்றார்கள். எங்கள் கோவிலைச் சுற்றிய சுவர் எழுப்ப உதவியும், எங்கள் மேன்மைதங்கிய மேற்றிராணிமார்கள் விசாரணைக்கெழுந்தபோது இங்கு நேரில் வந்து அவர்களைக் கண்ணியப்படுத்தியும்,

கிறீஸ்துவர்களுக்கு இன்னல் ஏற்படாதபடி நடவடிக்கைகள் எடுத்தும், இவ்வூரில் திருவிழாக்களில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநிறுத்த அதிகாரிகளை அனுப்பியும், இப்பகுதிகளில் வாழும் கிறீஸ்துவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்கள். அம்மன்னர்பிரான்கள் செய்த மகத்தான உதவிகளை நாங்கள் என்றும் மறத்தற்கில்லை. அவர்கள் அனைவரையும் நன்றியறிந்த உள்ளத்தோடு நினைவுகூர்ந்து, இந்த நல்விழாவில் அவர்களுடைய பேருதவியை எண்ணி எண்ணி அகமகிழ்ந்து ஆர்ப்பரிக்கின்றோம்.

அன்புசெழித்த அரச பெரும !

தங்கள் அன்பாட்சியில் நாங்கள் அடைந்துள்ள நலன்கள் எண்ணிறந்தன. கத்தோலிக் மக்களாகிய நாங்கள் தங்கள் சமஸ்தானத்தில் பல்வேறு இடங்களில் சிதறி இருப்பினும், இருபத்தொரு ஆயிரத்துக்குமேற்பட்டுப் பெருக வாழ்கின்றோம் என்பதை வெகுமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம். எங்களுடைய சமூக நல உரிமைகளைப் பேணிய வழியில் தங்கள் ஆட்சி சிறந்து வருகின்றது. அந்த நல்லாட்சி மேன்மேலுந் தழைக்கவேண்டுமென்பதே எங்கள் இருதய பூர்வமான விழைவு. வாழ்க நும் ஆட்சி வளர்க நும் புகழ்.

ஆவூர் குறிப்புகள்

(1947-ம் வருடம் ஆகஸ்ட்டுமீ 14உ ஆவூர் கோவில் 2-ம் நூற்றாண்டின் பொதுக் கூட்டத்தின்போது நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு :—

இச்சுப நாளில் புதுக்கோட்டை மகாராஜாக்களுக்கும், ஆவூருக்கும், ஆதியிலே இருந்தே ஏற்பட்டுள்ள சினேக மனப்பான்மையை எடுத்துக்காட்டும் சில சரித்திர சம்பந்தமான குறிப்புகளை இங்கு கூறாமலிருக்கமுடியாது.

முதலாவதாக, புதுக்கோட்டை ஸமஸ்தான ஆட்சியும், ஆவூர் தேவாலயமும், ஒரே தேதியில் அதாவது 1686 ஆண்டில் நிருவப்பட்டதானது எங்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கின்றது !

புதுக்கோட்டைக்கு முதலாவது மகாராஜாவான ரெகுநாதராய தொண்டமான் அவர்கள், விசுவாசத்தை பரப்புதலில் பட்சமும், அனுதாபமும் காட்டி ஸமஸ்தானத்திலும் ஆவூரிலுமுள்ள கிறிஸ்தவ குடிமக்கள் பால், எப்போதும் பட்சமும், நேர்மையும், பரோபகார சிந்தனையும் உடையவராய் இருந்துவந்தார்கள்.

அவர்களுக்குப் பின்வந்த புகழ்பெற்ற மகாராஜாக்களும், அதே நேர்மையான வழியைப் பின்பற்றிக்கொண்டார்கள்.

1691-ல் ஆவூர் பங்கு குருவான சேசு சபை சங். Venantus Bouchet S. J. என்னும் பெரிய சஞ்சிவிநாதர் அப்போதிருந்த மகாராஜா அவர்களிடம் மிகவும் பற்றுள்ளவராயிருந்தபடியால் மகாராஜாவின் விருப்பத்திற்கிணங்கி, 1700-ம்

The 200 year old tree at Avur.
In the disturbed days of the 18th century the rulers flag hoisted on the tree scared away marauding hordes.

ஆண்டில் ஒரு தேசப்படம் வரைந்துள்ளார். அப்படத்தின்மூலம், முதல் மகாராஜா அவர்கள் தமது ஆட்சியின் பத்து ஆண்டுகளில் தமது தலைநகரைச் சுற்றிலும் இரண்டேகால் மைல் நீளமுள்ள மதிலைக் கட்டுவித்தாரென்று அறிகிறோம்.

புதுக்கோட்டை மகாராஜாக்கள் குருமார்களிடத்தும், கிறிஸ்தவ மக்களிடத்தும், மிகவும் அன்பாகவே இருந்திருக்கிறார்கள். மதுரை மிஷனைச்சேர்ந்த இதே ஆவூருக்கு சாந்தோம் மேற்றிராணியாரான வந்திக்கத்தக்க Dom Francis Laynez S. J., 1711-ம் ஆண்டில் விசாரணைக்கு வந்து இங்கு 5 மாதங்கள் தங்கியிருந்த சமயம் ஸமஸ்தான மகாராஜா அவர்கள் ஆவூருக்கு விஜயம் செய்து ஆண்டவரவர்களை சந்தித்தார்கள்.

இன்னும் ஆவூர் ஆலயத்தில் சரண் அடைந்த கிறிஸ்துவ கள்ளி எவனையும் யாதொரு நிர்ப்பந்தமும் செய்யக்கூடாதென்று தொண்டமான் அவர்கள் ஆவூர் பங்கு குருவானவருக்கு 1713-ல் ஓர் அதிகாரப்பத்திரம் அளித்தார்கள். (ரோமாபுரி வருஷாந்திரக்கடிதம்).

இந்நிகழ்ச்சி அன்னவர்களின் கிறிஸ்துவ குடிமக்கள் பாலுள்ள பிதாவுக்குரிய கரிசனையையும், ஆவூர் பெரியநாயகி அன்னையின்பேரில் அவர்களுக்குள்ள பக்தியையும் குறிக்கிறது.

தொண்டமான் அவர்கள் கிறிஸ்துவ குருமார்களிடத்தில், ஒரு தனிப்பட்ட அன்பைக் காட்டினார்கள். அதற்குச் சான்றாக ஆவூரில் நடக்கும் ஒவ்வொரு கிறிஸ்துவ திருவிழாவிற்கும் அவர்களின் உத்தியோகஸ்தர்களில் மூவர் அல்லது நால்வரை அனுப்பி விழாவிற்கு வந்த பல்லாயிரம் ஜனங்கள் மத்தியில் ஒழுங்கின்மை நேரிடாவண்ணம் கவனித்து வந்திருக்கிறார்கள்.

1727-ல் திருச்சியில் வேத கலகம் நடந்த காலத்தில், புதுக்கோட்டை ஸமஸ்தானம் மிகவும் பத்திரமாக பாதுகாக்கப்பட்டதுமன்றி, அருகிலிருந்து தங்களிடம் அடைக்கலம் புகுந்த கிறிஸ்துவர்களையும் 1717-ம் வருஷத்திலிருந்து, 1727-வரை பாதுகாத்தது குறிப்பிடுவதற்குரிய அரிய சம்பவமாகும்.

ரோமாபுரிக்கு சேசு சபை குருக்கள் எழுதும் கடிதங்களிலெல்லாம், தொண்டமான் அவர்களின் பெருந்தன்மையையும், அவர்களின் நீதியின் நேர்மையையும் கூறாமலிருப்பதில்லை.

1829-ம் ஆண்டு ஜூலை 26௳ ஞாயிற்றுக்கிழமை மேன்மைக்குரிய புதுக்கோட்டை மகாராஜா அவர்கள் ஆவூர் தேவாலயத்தை தரிசிக்கவந்தபோது, பங்குகுருவானவர் ஊரிலில்லாததினிமித்தம் உபதேசியார் மூவரும் பிடாம்பட்டிக்குச்சென்று வழக்கம்போல் சந்திப்புவைத்து மகாராஜா அவர்களுக்கு மரியாதை செய்தார்கள்.

1835-ம் ஆண்டு பெரிய சனிக்கிழமையன்று ரெகுநாததொண்டமான் அவர்கள் தமது திவான் அப்பா அய்யருடன் ஆவூர் தேவாலயத்திற்கு வந்து ரூ 20 காணிக்கை செலுத்தியிருக்கிறார்கள்.

1850-ம்௵ ஏப்ரல்மீ பாஸ்கு ஞாயிறு தினம் ராமச்சந்திர தொண்டமான் அவர்கள் தம் பரிவாரத்துடன் ஆவூரை தரிசித்து பெரியநாயகி ஆண்டவளுக்கு வணக்கம் செலுத்தி ரூ 20 காணிக்கை அளித்தார்கள். மேற்படி மகாராஜாவும் உத்தியோகஸ்தர்களும் ஆவூர் ஆலயத்தில் அவர்களுக்கென்று குறிப்பிட்ட ஆசனங்களில் அமர்ந்த பின்னர், சங். A. Murray Arokianathar சுவாமியவர்கள் மகாராஜாவின் விண்ணப்பத்திற்கிணங்கி, ஆங்கிலம், தமிழ், இந்துஸ்தானி, தெலுங்கு, பிரெஞ்சு முதலிய பாஷைகளில் சொற்பொழிவு செய்ததைக்கேட்டு, ஆச்சரியமும் அகமகிழ்ச்சியுமடைந்தனர்.

மேன்மைக்குரிய மகாராஜா அவர்கள் திரும்புவதற்கு முன், சங். A. Murray Arokianathar, சங். Pedro Philip Noronha ஆகிய இவ்விரு குருக்களையும் புதுக்கோட்டை அரண்மனைக்கு விருந்தினராக அழைத்துவிட்டுப்போனார்கள். அவ்வழைப்புக்கிணங்கி அதே ஆண்டு ஜூன்மீ 4உ மேற்படி சுவாமிமார்கள் பல்லக்கில் அரண்மனைக்குச்சென்று அங்கேயே மகாராஜா அவர்களின் தனிப்பட்ட விருந்தினராக ஒரு வாரம் தங்கினார்கள். மகாராஜாவிடம் பிரிவு விடைபெற்ற போது சங். A. Murray Arokianathar சுவாமிகளுக்கு ஒரு வாள் அடங்கிய ஊன்றுகோலை மகாராஜா அவர்கள் நன்கொடையாக அளித்தார்கள்.

கடந்த பல்லாண்டுகளாக மகாராஜாக்கள் வருஷா வருஷம் ஆவூர் பாஸ்குத் திருவிழாவிற்கு தண்ணீர்பந்தல், வெளிச்சம், சாரணர், போலீஸ் பந்தோபஸ்து, வைத்திய உதவி, சுகாதார வசதிகள் முதலிய பேருபகாரங்களைச் செய்துவருவதானதும், இன்று இவ்வைபவத்தைச் சிறப்பிக்கவந்த மாக்ஷி தங்கிய மன்னர் பிரான் அவர்களின் பிரசன்னமும், கனம் திவான் அவர்களின் பிரசன்னமும், என்றும் மறக்கமுடியாத சரித்திர சம்பந்தமான குறிப்புகள் எனக்கூறி குதூகலம் அடைகின்றோம்.

ஆவூர் ஆலயத்திற்கு புதுக்கோட்டை மகாராஜாக்கள் மானியமாக அளித்த இவ்வூர் வீதிகளிலுள்ள பல பெரிய புளியவிருக்ஷங்கள் இன்னும் பசுமையாய் நின்று பல்லாயிரம் யாத்ரீகர்களுக்கு நிழலிட்டு வருவது புதுக்கோட்டை ஸமஸ்தானம் ஆவூருக்கு ஆதியிலிருந்து இந்நாளும் எந்நாளும் அளித்துவரும் அரிய பெரிய உபகாரங்களுக்குப் போதிய சான்று என்பதில் சந்தேகமில்லை.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்திற்கும் ஆவூருக்கும் இவ்வளவு காலமாக ஏற்பட்டுள்ள சிநேகம் இன்னும் அதிகரிக்கவும், புதுக்கோட்டை ஸமஸ்தானமும், மகாராஜாவும், திவானும் நீடூழி வாழவும், உந்நததேவன் அனுக்கிரகம் புரிய எம் ஆலய பாதுகாவலி பெரியநாயகி ஆண்டவளை மன்றாடுகிறோம்.

'கொடும்பை என்னும் கொடும்பாளூர்.'

(K. R. வெங்கட்டராம அய்யர்.)

"அறையும் பொறையும் ஆரிடை மயக்கமும்
நிறைநீர் வேலியும் உறைபடக் கிடந்தவிர்
நெடும்பேர் அத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்"—

என்று சிலப்பதிகாரத்தில் சித்தரித்திருப்பது போல இன்றும் திருச்சினாப்பள்ளியிலிருந்து மதுரைக்குச் செல்லும் பாதையில் கொடும்பாளூருக்கு அருகாமையில் பாறை நிறைந்துள்ள பாதையும், கானல் நீரும், ஏரியும் காணப்படுகின்றன. இப்பாதையில் இன்று நாம் செல்லும் போதும் சங்க காலம் தொட்டு உறையூருக்கும் மதுரைக்கும் நடுவிலுள்ள பாதை இது என்பது நமக்கு ஞாபகம் வருகிறது.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இவ்வூரைக் "கோனாட்டுக் கொடிநகரம்"—என்று சிறப்பிக்கின்றார்.

இருக்கு வேளூர் என்ற சிறப்புப் பெயரைக் கொண்ட இவ்வூர் கோனாட்டை ஆண்ட இருக்குவேள் மரபினர்களின் தலைநகரம். இம்மரபில் தோன்றியவர் இடங்கழி நாயனார். இவ்வள்ளல், தன் களஞ்சியங்களைத் திறந்துவைத்து ஏழை மக்கள் எல்லோருக்கும் வேண்டுமட்டும் உணவளித்து வந்தனர் என்ற கூற்றைப் பெரியபுராண வரலாற்றினின்று நன்கு உணரலாம்.

மூச்சுகுந்தேசுவரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து இருக்குவேளிர் வமிசாவழி அறியக்கிடக்கின்றது. அவர்களுடைய பட்டப்பெயர் மட்டிலும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. எட்டாம் நூற்றாண்டில் பாண்டியர் குலத்தைச் சார்ந்த மாறவர்மன் இராசசிம்கன் சேனைக்கும், பல்லவ நந்திவர்மன் படைகளுக்கும் கொடும்பாளூரில் கடும்போர் நிகழ்ந்தது. இப் போரைப் பற்றிய சில குறிப்புக்கள், பெரும்பிடுகு சுவரன் மாறன் முத்தரையனால் குறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களினால் அறியக் கிடக்கின்றது. சுமார் கி. பி. 840 முதல் 909 வரையில்—இங்கு ஆண்ட மாறவன் பூதி என்ற தென்னவன் இளங்கோவேளார், பாண்டிய மன்னர்களுக்கு விரோதமாகச் சோழன் ஆதித்தியனிடத்தில் நட்புக் கொண்டு தொண்டை மண்டலத்தை வென்றார். இந்நட்பின் பயனாக இருக்குவேளிர் மரபினருக்கும், சோழ மரபினர்க்கும் மணக்கலப்பு முறையில் தொடர்பு ஏற்பட்டது. பின் வந்த இருக்குவேளிர் மன்னன் (சுமார் கி. பி. 909—59) வீர சோழன் பராந்தகன் என்பவனாவன். இவனுக்கு, மகிமாலய இருக்குவேள் சமராபிராமன், என்ற பட்டங்கள் உண்டாயின. கி. பி. 940—ல் ஈழத்திற்கு அனுப்பப்பட்ட சோழப்படைக்கு இவன் தலைமைப் பதவியைத் தாங்கினான். இவன் மகன் இம்மரபிலேயே புகழ்பெற்ற ஆதித்தியன் பூதி விக்கிரமகேசரி எனப்படுவான். இவனுக்கு மதுராந்தகன் இருக்குவேள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவனது மூத்த மகன் சிறிய வேளார் என்ற பராந்தகன் ஈழத்திற்குச்

சோழப்படையைச் செலுத்தி ஆங்கு வீர சுவர்க்கம் பெற்றான். மற்றொரு மகன் மும்முடி சோழன் என்பவன், சோழ மன்னன் இராசராசன் காலத்தில், வட நாட்டுச் சளுக்கியருடன் போர்தொடுத்து வெற்றி பெற்றான். பிற்க 11-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இவ்விருக்கு வேளிர் குலத்தார், சிறு அரையர்களாக மாறிவிட்டனர். இவ்விருக்குவேள் மன்னர்களில் ஒருவன் கட்டளை என்ற கிராமத்திலிருந்து காவிரியின் வாய்க்கால் ஒன்றைக் கொடும்பைக்கு வெட்டிக் கொண்டு வர முயன்றான். இந்நிகழ்ச்சி பெரு வியப்புக்குரியதேயாகும் எனெனில் இக் காலத்தும் இத்தகைய நோக்கம் இருந்துவருகின்றது என்பதே. சோழபாண்டியர் காலத்தில் இவ்வூரில் இரண்டு நகர சபைகள் இருந்தன. இது வணிகர் குலத்தாரின் குழாம்கொண்ட மணிக்கிராமமாகவும் விளங்கியது. நாயக்கர் மரபினைச் சார்ந்த மங்கம்மாள் ஆட்சிக் காலத்தில் இவ்வூரில் மங்கம்மாள் சமுத்திரம் என்ற ஒரு இனும் கிராமம் இருந்தது.

மாறவன் பூதியால் கட்டப்பட்ட திருப்பூதீசுவரம் என்னும் ஆலயம் இப்பொழுது காணப்படவில்லை. முச்சுகுந்தேசுவரம் என்ற ஆலயம் வீர சோழன் பராந்தகனால் கட்டப்பட்டது. ஆதித்தியன் பூதி விக்கிரமன் கட்டிய கோவில் தான் மூவர் கோவில் என இக் காலத்து வழங்குவதாகும்.

பிற்க இக் கோயில்களின் வரிசையைச் சற்று ஆராய்வோம். எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கட்டப்பட்ட ஐந்தளி என்ற ஆலயத்தின் அடிப்பாகமே இப்பொழுது வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரே பீடத்தில் ஐந்து கர்ப்பக்கிரகங்கள் அமைந்திருப்பதால் ஐந்தளி என்ற பெயர் பெற்றது. இங்குள்ள சிற்ப வேலைப்பாடுகள் மகாபலிபுரம், திருத்தணி, காஞ்சி முதலிய இடங்களிலுள்ள பல்லவ சிற்பவேலைப் பாடுகளையே ஒத்திருக்கின்றன. இங்குள்ள சிங்கத் தூண்களில் சிலவற்றை விராலி மலையில் ஒரு மண்டபத்தில் இன்றும் காணலாம். முச்சுகுந்தீசுவரம் என்ற ஆலயம் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டதாகும். பல்லவர்கால சிற்ப இலக்கணங்களே சோழர் காலத்திலும் மேற்கொள்ளப்பெற்று வந்ததோடு அமையாது, பின்னர் இவ்விருவருடைய சிற்ப வேலைப்பாடுகள் கலப்புற்று விளங்குவதாயிற்று. இத்தகைய சிற்ப இலக்கணக்கலப்பை இங்கு காணலாம். மூவர் கோயில்தான் இவ்வூருக்கும் தமிழ்நாட்டிற்கும் திலகமாக விளங்குகின்றது. இங்கு நடுவில் மூன்று கற்பக் கிரகங்களும், சுற்றுப் பிரகாரத்தில் 15 ஆலயங்களும் இருந்தன. இம்மூன்று கர்ப்பக்கிரகங்களும் பூதி விக்கிரம கேசரி, தன் பெயரால் ஒன்றினையும், ஏனையவற்றைத் தன் மனைவியர், கற்றலி, வரகுணை என்ற இருவர் பெயராலும் அமைத்தான். இக் கோயிலின் கல்வெட்டிலிருந்து, இவ்விடத்து காளமுக சைவ மரபினர் மடம் ஒன்று இருந்ததாகத் தெரிகின்றது. இம் மூவர் கோயிலின் விமானத்தைக் கருத்திற்கொண்டுதான் இராசராசன் தஞ்சையில் பிரஹதீசுவரர் ஆலயத்தை அமைத்தான் என்று வலியுறுத்தப்படுகின்றது. பிற்காலச் சோழர்களின் திருப்பணிகள் யாவும் இம்மூவர் கோயிலையே ஆதாரமாகக் கொண்டன.

Múvarkóvil—Central Temple, Koḍumbálúr.

இங்கு சுமார் 108 சிவாலயங்கள் இருந்தன என்பதை நாம் உறுதியாக நம்பக் கிடக்கின்றது. எங்கு தோண்டினும் சிவலிங்கங்களும் நந்திகளும் காணப்படுகின்றன. தஞ்சையிலுள்ள நந்தியைப் போல ஒரு நந்தி இங்கு தோண்டி எடுக்கப்பட்டிருப்பதே ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆராய்ச்சிக்காரர்கள் இங்கு தோண்டி எடுக்கப்பெற்ற சிற்பங்கள் மிகவும் மேன்மை பொருந்தியவை என்று கூறுகின்றனர். திருபராந்தகன், திருபுரசுந்தரி, அசுரன் ஆகிய மூவர் கொண்ட ஒரு கூட்டச் சிற்பங்கள் துர்க்கை, விஷ்ணு, மோகினி, வலம்புரி, கணேசன் முதலியவை விமானங்களில் காணப்படும் தக்ஷிணாமூர்த்தி, உமாசகாயமூர்த்தி, காலாரிமூர்த்திபோன்ற மூர்த்தங்கள் இவைகளைக் காணுந்தோறும் நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதோடு அமையாது சலியாத பேரின்பத்தை ஊட்ட வல்லது. கருணை பொலி முகமும், அழகு சொட்டும் பாவமும், உணர்ச்சிகளைக் கொள்ளை கொள்ளும் உறுப்பு வடிவங்களும் இதற்கிணையாக வேறு எங்கும் காணுவது மிக அரிது. இத்தகைய சிற்பங்களே சோழர் குலத்தைப் புகழ்பெற விளக்குதலோடு, அவர் காலச் சிற்பங்களுக்கு நிகரிலை என்றும் தனிச் சிறப்பையும் தமிழ் நாட்டின்கண் நிலை நிறுத்தின. இத்தகைய சிற்பங்களிற் பல கொடும்பாளூரிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் சில தலைநகரின் கண்ணுள்ள காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வூரைச சுற்றிலும் கோட்டை மதிற் சுவர்கள் காணப்படுகின்றன. பண்டைச் சிற்பக்கலை ஆராய்ச்சியாளர்கள் இவ்வூர்களின் பல பாகங்களைத் தோண்டி ஆராய முற்படுவார்களேயாயின், தமிழர்களின் நாகரீகச் சிறப்பை நூற்றாண்டு முறைவைப்பில் உலகிற்கே விளக்கத் துணியலாம். இங்கு புதைந்து கிடக்கும் பொருள்களின் புதுமையை பின் தோன்றும் வார்சுகளே அறிவார்கள்.

ஐக்கிய சங்கங்கள்.

நமது ஸமஸ்தான ஐக்கிய சங்கங்களின் அபிவிருத்தி பிரிட்டிஷ் இந்திய சங்கங்களின் அபிவிருத்தியை ஒட்டியேயிருப்பதால் சிறிதளவு பிரிட்டிஷ் இந்திய சங்கங்களின் அபிவிருத்தியைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியதவசியம்.

இந்தியாவில் ஐக்கிய சங்கங்கள் முதலில் ஏற்படுத்தப்பட்டதெதற்காகவெனில் விவசாயிகளின் கஷ்டங்களை அவர்களுக்குப் பணம் கொடுப்பவர்களின்றும் போக்கடிக்கவேதான். அதனால் அது கிராமக்கடனைத்தீர்ப்பதற்காக ஏற்பட்டு பிறகு கொஞ்சம் கொஞ்சமாக பண்ட உற்பத்தி இட்டங்களிலும், பண்ட விநியோகங்களிலும், நாணயப் பரிவர்த்தனையிலும், வியாபார முறையிலும், இன்ஷியூரன்ஸ் முறையிலும் விஸ்தரிக்கப்பட்டது.

சங்கங்களின் ஆதி விருத்தாந்தம்.

1892-ம் வருஷத்திலேயே மதராஸ் கவர்ன்மெண்டில் நீண்ட நாளைய அநுபவம் பெற்ற உத்தியோகஸ்தராகயிருந்த ஸர். பிரடெரிக் நிக்கல்ஸன்

என்பவர் ஐரோப்பிய விவசாய ஐக்கிய சங்கங்களைப்பற்றியும் அதை ஒத்து எந்த முறையில் இந்தியாவில் கையாண்டால் கிராமக்கடன்களைத் தீர்க்கலாம் என்பதைப் பற்றியும் ஓர் அறிக்கை விடும்படி நியமிக்கப்பட்டார். அவர் பரிசீலனைக்குப் பிறகு ஒப்பற்ற ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதின்படி விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் அளிக்கவும் கிராம வாசிகள் செட்டுடன் வாழ்வதற்கும் ஜெர்மனியிலுள்ள ரெய்பீஸன் (Raiffeisen) சங்கங்களைப்போன்ற ஐக்கிய நாணய சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டுமென்று சிபார்சு செய்தார். அதே சமயத்தில் மத்திய மாகாண கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் Mr. H. டேர்னெக்ஸ் என்பவர் "வடக்கிந்திய ஜனங்களின் பாங்குகள்" என்று ஓர் புஸ்தகத்தை அந்த ராஜதானியில் அவர் விசாரித்தறிந்ததின் மூலம் வெளியிட்டார். இந்தப் பிரசுரங்கள் மத்திய கவர்ன்மெண்டாரின் கவனத்தைக் கவர்ந்து அப்பொழுது வைஸிராயாகயிருந்த கர்ஸான் பிரபு இவ்விஷயத்தை இந்தியா கவர்ன்மெண்டின் பொக்கிஷ மெம்பராகயிருந்த ஸர். எட்வர்ட்லால் தலைமையின் கீழ் ஓர் கமிட்டிக்கு பரிசீலனை செய்யும்படி அனுப்பிவித்தார். அந்தக் கமிட்டி ஐக்கிய நாணய சங்கங்களை இந்தியாவில் ஏற்படுத்தும்படிக்கும் சில சலுகைகள் அவைகளுக்குக் காண்பித்து ஓர் சட்டமியற்றப்படவேண்டுமென்றும் சிபார்சு செய்தது. அதனால் தான் 1904-ம் வருஷத்திய ஐக்கிய நாணய சங்கங்களின் சட்டம் ஏற்பட்டது.

புதுக்கோட்டை 1908-ம் வருஷத்திய ஐக்கிய நாணய சங்க ரெகுலேஷனும் 1904-ம் வருஷத்திய இந்தியச் சட்டமும்.

ஸ்ரீ-தர்பார் அவர்கள் 1908-ம் ஆண்டில் 1904-ம் வருஷத்திய இந்தியச் சட்டத்தையொத்து சங்க வேலைகள் திரம்பட நடை பெறுவதற்கு ஓர் ரெகுலேஷன் கொண்டு வந்தார்கள். அது முதலே இச்சங்கங்கள் நமது ஸதஸ்தானத்தில் ஏற்பட்டதென்று சொல்லலாம். சிறிய ஐக்கிய சங்கங்களின் மூலமாக விவசாயிகளும், தொழிலாளர்களும், குறைந்த வருமானமுள்ளவர்களும் எவ்விதம் தாங்களே தங்கள் உதவியை நாடலாமென்ற கொள்கையைக்கொண்டே இந்த ரெகுலேஷன் ஏற்படுத்தப்பட்டது. 10 பேர்களோ அதற்கு அதிகமான பேர்களோ கிராமத்திலோ, நகரத்திலோ சேர்ந்து ஓர் சங்கமாகப் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்றால் செய்துகொள்ளலாம். அவ்விதம் ஏற்படும் சங்கங்களில் ஐந்தில் நான்கு விகித அங்கத்தினர்கள் விவசாயிகளாகயிருந்தால் அதற்கு "ரூரல் கிரடிட் சங்கம்" என்றும் அதே விகிதத்தில் அங்கத்தினர்கள் விவசாயிகளாகயில்லாமலிருந்தால் அந்தச் சங்கத்திற்கு "அர்பன் கிரடிட் சங்கம்" என்றும் பாகு படுத்தப்பட்டது. அச்சங்கங்களுக்கு ஸர்க்கார் மேற்பார்வையும், வருமானவரி, ஸ்டாம்புக் கட்டணம், ரிஜிஸ்திரேஷன் கட்டணம் இவைகள் விதிக்கப்படாமலும் சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டன. இம்மாதிரி முதன் முதலாகப் 1908-ம் வருஷத்தில் ஸெப்டம்பர் மாதம் 22-வயன்று பதிவு செய்யப்பட்ட சங்கம் கரம்பக்குடி ஐக்கிய நாணய சங்கமாகும். 7 வருஷ காலத்தில் 15 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. அவைகளில் 11 விவசாயிகள் ஐக்கிய சங்கங்கள் பாக்கி விவசாயிகள் அல்லாதார் ஐக்கிய சங்கங்களாகும்.

1912-ம் வருஷத்திய இந்தியச் சட்டமும் 1915-ம் வருஷத்திய ஸமஸ்தான ஐக்கிய சங்கங்களின் ரெகுலேஷனும்.

1904-ம் வருஷத்திய இந்தியச் சட்டத்தில் இச்சங்கங்களின் கொள்கைகளை விஸ்தரிக்கப் பல திருத்தங்கள் கொண்டுவர நேர்ந்தது. அவ்விதம் செய்ததனால் 1912-ம் வருஷத்திய சட்டம் ஏற்பட்டது. இதனால் ஐக்கிய நாணய சங்கங்களில்லாத பண்ட உற்பத்தி சங்கங்களும், பண்ட விநியோக சங்கங்களும், வியாபாரச் சங்கங்களும் இன்ஷியூரன்ஸ் திட்டத்தையும் ஏற்படுத்திப் பதிவு செய்யப்படலாமென்றும் பாங்குகளுக்கு பண உதவி செய்யும் சங்கங்களைப் பதிவு செய்யலாமென்றும் மொத்தமாக சங்கங்களுக்குப் பண உதவி செய்யவும் மேற்பார்வை பார்க்கவும் அதில் விதிகள் ஏற்படுத்தப்பட்டது. இதைத் தவிர "அர்பன்" "ரூரல்" சங்கங்கள் என்பதற்குப் பதிலாக "பொறுப்பு வாய்ந்த வரையறுக்கப்பட்ட" "பொறுப்பு வாய்ந்த வரையறுக்கப்படாத" சங்கங்கள் எனவும் பிரிக்கப்பட்டன. இந்தியாவிலுள்ள சங்க அபிவிருத்தியைக் கண்டு நமது ஸமஸ்தானத்திலும் விஸ்தரிக்க ஶ்ரீ-தர்பார் அவர்கள் 1915-ம் வருஷத்தில் 1912-ம் வருஷத்திய இந்தியச் சட்டத்தையே ஒத்து நமது ஸமஸ்தானத்திலும் சட்டமாகச் செய்தார்கள்.

கூட்டுறவுக் கமிட்டிகளும் ராஜதானிச் சட்டங்களும்.

இந்தக் கூட்டுறவு திட்டம் இந்தியாவிற்கு புதியதாதலால் இவைகளின் வேலைகளைக் கண்காணிக்கவும் இவைகளின் அபிவிருத்திக்குரிய திட்டங்களைத் தெரியப்படுத்தவும் இந்தியா கவர்ன்மெண்டார் நடு நடுவே சில கமிட்டிகளை நியமித்தார்கள். அவ்விதம் ஏற்படுத்திய கமிட்டிகளில் முதலாவது கமிட்டி 1914-ம் வருஷத்திய ஆனரபிள் ஸர் எட்வர்ட் மெக்ஸகன் தலைமையில் நடைபெற்றது. அக்கமிட்டி விஸ்தாரமான விசாரணைக்குப் பின்னர் இந்தியாவில் கூட்டுறவு திட்டம் சுமாராக வேரூன்றி விட்டதென்றும் எதிர் காலத்தில் நல்ல பலனை எதிர்பார்க்க இடமிருக்கிறதென்றும் தெரிவித்தார்கள். இந்தச் சங்கங்களின் அபிவிருத்திக்குள்ள உபயோகமான சிபார்சுகளையும் அக்கமிட்டியார் செய்தனர்.

1919-ம் வருஷத்தில் மாண்டேக் செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வந்தகாலத்தில் கூட்டுறவு மாகாணங்களைச் சேர்ந்த விஷயமாக மாறி இதை ஒவ்வொரு மாகாண கவர்ன்மெண்டிலும் பரிசீலனை செய்யத் தொடங்கினார்கள். மத்திய மாகாணங்கள், பீஹார், ஐக்கிய மாகாணங்கள், பர்மா இவைகளிலுள்ள கவர்ன்மெண்டுகள் பரிசீலனைக் கமிட்டிகள் நியமித்து 1912-ம் வருஷத்திய இந்தியச் சட்டத்தைத் திருத்தி தத்தம் இராஜதானிகளில் கூட்டுறவு சட்டங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். மதராஸ் கவர்ன்மெண்டில் 1927-ம் வருஷத்தில் டவுன்ஸெண்ட் கமிட்டியையும் 1939-ம் வருஷத்தில் விஜயராகவாச்சாரியார் கமிட்டியையும் ஏற்படுத்தியதின் மூலம் ஐக்கிய நாணய சங்கங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்க்கும்படியும் விவசாயிகள் சம்பந்தமான சங்கங்களை விஸ்தரிக்கும்படியும் சிபார்சு செய்தார்

கள். 1938-ம் வருஷத்தில் நமது ஸமஸ்தானத்திலும் கூட்டுறவு சங்கங்களின் அபிவிருத்திக்கான விஷயங்களைத் தெரிவிக்க திருச்சிராப்பள்ளியில் உபரிஜிஸ்தாராகயிருந்த ஸ்ரீ S. நித்தியானந்தம் என்பவரை பிரத்தியேக உத்தியோகஸ்தராக ஈ-தர்பார் அவர்கள் நியமித்தார்கள். அவர் குறிப்பிட்ட சீர்திருத்தங்களில் பல அநேகமாக நமது ஸமஸ்தானத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. மதராஸ் கவர்ன்மெண்டில் டவுன்ஸெண்ட் கமிட்டி அறிக்கையைப் பெற்றதும் 1932-ம் வருஷத்திய மதராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இப்பொழுது அமுலிலிருக்கும் 1933-ம் வருஷத்திய புதுக்கோட்டை ஸமஸ்தான ஐக்கிய சங்கங்களின் ரெகுலேஷன் இதை ஒத்தேதான் சட்டமாகச் செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தினால் ஏற்கனவேயுள்ள சட்டத்தின் பூர்வ பீடிகையில் இருந்த "குறைந்த வருமானமுள்ளவர்கள்" என்ற வார்த்தைகளை எடுத்துவிட்டு "செட்டை அபிவிருத்தி செய்யவும், சுய உதவிக்கும், நல்ல வாழ்க்கை, நல்ல வியாபாரம், நல்ல விதங்களில் பண்ட உற்பத்தி செய்தல் இவைகளின் மூலம் விவசாயிகளும் சாதாரணமாக இவைகள் தேவையாகயுள்ள மற்றவர்களும் பரஸ்பர உதவி பெறுவதற்கும்" என்ற ஐக்கிய சங்கங்களின் கொள்கையை எடுத்துக் காட்டும் வாக்கியம் சேர்க்கப்பட்டது: இதனால் கவர்ன்மெண்டாருக்கு இந்தச் சங்கங்களின் அபிவிருத்தியை விஸ்தரிக்க ஒத்தாசையாகயிருந்தது. இந்தச் சட்டத்தினால் இச்சங்கங்கள் பொது ஜனங்களில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கும் வகுப்பாருக்கு மட்டுமின்றி தேவையாகயுள்ள மற்றவர்களும் பரஸ்பர உதவியையும் சுய உதவியையும் பெறும்வண்ணம் விசால நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கிறது.

1945-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட அகில இந்தியக் கூட்டுறவாளர் கமிட்டி விளைபொருள்களின் அபிவிருத்திக்கானவும் தேசமுன்னேற்றத்திற்கானவுமான திட்டங்களைத் தங்கள் அறிக்கையில் விடுத்திருக்கின்றனர். அவைகள் பரிசீலனையிலிருந்து வருகின்றன. பொது ஜனங்கள் ஐக்கிய சங்கங்களின் கொள்கையான "ஒவ்வொருவரும் பிறருக்காக, எல்லோரும் ஒவ்வொருவருக்காக" என்பதையுணர்ந்து தேச நலத்தைக் கருதிச் சுய நலத்தைவிட்டிருந்தால் சுதந்திர இந்திய கவர்ன்மெண்டில் ஐக்கிய சங்கங்கள் மேன்மையான ஸ்தானத்தை வருங்காலத்திலடையும்.

ஆகாரமும், தேக புஷ்டியும்—(2)

(by. V. S. Ganapati Sastriyal).

முன் காட்டிய Table-ல் சேர்ற்ற உணவு 1,750 உஷ்ணாங்கங்கள்தான் அடங்கியது என்று காட்டப்பட்டது, தற்கால இந்தியாவில் ஏழை பணக்காரர் எல்லோரும் உண்ணும் உணவிலிருந்து எடுக்கப்பட்ட சராசரி கணக்காகும். ஆனால் பெரும்பாலோரான கிராமவாசிகளையும், அவர்களில் பெரும்பாலோரான ஏழைப் பட்டாதார்களையும், நிலமற்ற வார சாகுபடிக்குடிகளையும், அவர்கள் உண்ணும்

உணவையும் எடுத்துக் கணக்கிட்டால் அது பட்டினி உணவாகத்தான் இருக்கும். அதிலும் அரிசி அல்லது வரகுபோன்ற ஒரு தானியமும், புளி, மிளகாய், கொஞ்சம் கீரை அல்லது ஒருகாய்கறித் துண்டுகள் கலந்த ஒரு "குழம்புத் தண்ணீரும்" தான் உண்டு. அவைகளின் உஷ்ணாங்கங்களைக் கவனித்தால் சுமார் 1,600 முதல் 1,620 உஷ்ணாங்கங்கள்தான் இருக்கும். இதில் பங்கீடு நாள்களுக்கு முன்னால் இருந்த 15 அவுன்ஸு புழுங்கல் மெஷின் குத்தலரிசியின் அளவை வைத்துக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது அவுன்ஸு 1-க்கு 98 உஷ்ணாங்கங்கள் வீதம்.

ஆனால் உஷ்ணாங்கங்களின் அளவை மட்டும் கவனித்துக் கணக்கிடுவது தவறு. உண்மையான புஷ்டியில்லை அந்தக் கணக்கினால்மட்டும் புலப்படாது. அது விஷயமாக விவரிப்பதற்குமுன் மனிதன் தேகபுஷ்டியுடன் நோயற்று வாழ்வதற்கு வேண்டிய அளவுப்பிரமாணமென்னவென்று கவனிப்போம். இந்த விஷயம் தலைப்பிலேயே சொல்லவேண்டியது. தவறுதலை மன்னிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஸர்வதேச சங்க (League of Nations)த்தில் உணவு நிபுணர்கள் கூடி மனிதன் என்ற யந்திரத்தின் சக்திக்குகந்த உணவுத் தேவைகள் எவையென்று பரிசீலனம் செய்தார்கள். அந்த விஷயமாக "புஷ்டியின் பிரச்னை" "Problem of Nutrition" என்ற ஒரு அர்ஜி தயாரித்தார்கள். அதில் பின்வருமாறு திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

ஐரோப்பாபோன்ற ஸமசீதோஷ்ணமுள்ள அதாவது வெயிலும், குளிரும் ஸமமாகவுள்ள பிரதேசங்களில் சாதாரணமான வாழ்க்கையை நடத்திக்கொண்டு சரீர உழைப்பு இல்லாமல் இருப்பவர்களின் உணவுத் தேவையை அடிப்படையாக எடுத்துக்கொண்டு அதற்குமேல் உழைப்பாளிகளின் தேவைக்குரிய உணவும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

1. அந்த அளவுப்படி 2,400 உஷ்ணாங்கங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு ஆண் அல்லது பெண்ணுக்குத் தேவையாகயிருக்கிறது.

2. அங்கத் தசைகளை அமர்த்தி வேலை செய்பவர்களுக்கு அடியிற்கண்ட பிரகாரம் உபரியாக ஆகாரம் தேவையாகயிருக்கிறது.

(க) லேசான பாடு—ஒரு மணி நேர வேலைக்கு 75 உஷ்ணாங்கங்கள் தேவை.

(ங) மத்தியமமான பாடு—ஒரு மணி வேலைக்கு 75 உஷ்ணாங்கங்கள் வரை.

(ச) கடினமான வேலை—ஒரு மணி வேலைக்கு 150 உஷ்ணாங்கங்கள் முதல் 300 உஷ்ணாங்கங்கள் வரை.

(ஞ) வெகு கடினமான வேலை—ஒரு மணி வேலைக்கு 300 உஷ்ணாங்கங்களுக்கு மேல்.

நம் தேசம் உஷ்ணமான தேசம். ஆகையால் ஸர்வதேச பிரமாணத்தில் 10 சத விகிதம் குறைத்துக்கொள்ளலாம். ஏனெனில் சூரிய கிரணங்களில் உணவு அடங்கியிருக்கிறது. ஆகையால் உஷ்ண மண்டலத்தில் இருக்கும் நமக்கு 2,160 உஷ்ணாங்கங்கள் சாதாரண வேலை செய்யும்வரை போதுமானவை. ஆனால் நம் தேசம் பெரும்பான்மை விவசாயிகள் அடங்கியது. அவர்களுடைய பாடு கடினம் என்று சொல்லவேண்டும். இயற்கை வசதிகள் படைத்த பாகங்களில் நதிகளின் பாசனம், பருவக்காற்று மழைகள் இவைகளை அனுபவிக்கும் பிரதேசங்களில் கிருஷிகளுக்குப் பாடு குறைவாகயிருக்கும். அவர்களின் பாட்டை மத்தியமமான பாடு என்று சொல்லலாம். நதிப்பிரதேசங்களும், பருவமழைப் பிரதேசங்களும் ஸ்வல்பமாகையால், பெரும்பான்மைப் பிரதேசம் இந்தியாவில் கடின வேலை செய்யும் விவசாயப் பாட்டாளிகள் அடங்கியது. மேலும் விவசாயப்பாட்டில் நம் தேசத்தில் ஆண்களுக்கு ஒப்பாகவே பெண்களும் பாடுபடவேண்டியிருக்கிறது. ஆகையால் பெண் மக்களும் கடின வேலை செய்யும் வகையில் சேர்க்கப் படவேண்டியவர்கள். விவசாயப் பாட்டாளிகளுக்கு பிரதிதினம் சுமார் ஆறு மணி நேரம் வேலையிருப்பதாக வைத்துப்பார்த்தால் சுமார் 2,600 முதல் 2,800 வரை உஷ்ணாங்கங்கள் தேவை. முக்கியமாக, கா டாரம்பங்களில் கிணறுகளிலிருந்து நீர் இறைத்து புஞ்சைப் பயிர்களும், தோட்டப்பயிர்களும் சாகுபடி செய்பவர்கள் வெகு கடின வேலை செய்பவர்களாகையால் அவர்களுக்கு 2,800 முதல் 3,000 வரை உஷ்ணாங்கங்கள் தேவையாகயிருக்கும். எல்லா வகைகளையும் சேர்த்துக் கவனித்தால் சராசரியாக ஒரு இந்தியனுக்கு சுமார் 2,600 உஷ்ணாங்கங்களுக்குக் குறையாத உணவு தேவை. ஸ்திரீகளுக்கு கர்ப்ப காலங்களில் உபரியான உணவு தேவையாகயிருக்கிறது. ஏனெனில் கர்ப்ப காலத்தில் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்கு தாயின் சரீரத்திலிருந்தே உணவு எடுத்துக்கொள்ளப்படுகிறது. பால் கொடுக்கும் தாய்களும் தம் தேக சக்தியிலிருந்து ஒரு பாகம் இழக்கவேண்டியிருப்பதால் உபரியாக போஷித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

உணவு நமக்குப் பயனளிப்பதும் உணவின் அளவைமட்டும் பொறுத்ததல்ல. அளவைப் பெருக்கி உஷ்ணாங்கங்களைப் பெருக்குவதால் மட்டும் முழுப்பயனையும் அடைய இயலாது. நாம் புஷ்டி அடைவது உணவின் குணத்தையும் பொறுத்திருக்கிறது. சீரான உணவுத் திட்டத்தை அமைப்பதில் தேகத்தின் உறுப்புக்கள், உறுப்புக்களின் காரியங்கள், அவைகளின் விதங்கள் முதலியவற்றை மேம்படுத்துவதற்கான குணங்களுள்ள உணவு சாப்பிடவேண்டும். அவ்வகையில் ஊன் சத்துக்கள், மாவு பண்டங்கள், பலவித உலோக சத்துக்கள் மனிதனுக்குத் தேவையாகயிருக்கின்றன.

(தொடரும்).

உணவுப் பொருள்களை இன்னும் அதிகமாய் கிடைக்க குடிகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(by G. Duraiswami Ayyengar.)

உணவுப் பொருள் குறைவு நாளுக்கு நாள் அதிகமாக காணப்படுகிறது. தான்யங்களின் குறைவை சமாளித்துக்கொள்ள காய்கறிப் பயிர்கள் பழ தோட்டங்கள் உற்பத்தி, பால் மாடு, கோழி, தேனீக்கள், வளர்ச்சியில் ஜாஸ்தி ஈடுபட்டால், பசியினால் வருந்துகிறவர்களை, விவசாயிகள் காப்பாற்றலாம்.

இங்கும் ஜனங்கள் உற்சாகத்துடன் இவைகளை உற்பத்தி செய்வதில் உழைத்தால், நல்ல பலன் அடையலாம்.

ஸர்க்காரும், விவசாய இலாகா அதிகாரிகளும், இவ்விஷயங்களில் உழைக்க முன்வருவபர்களுக்கு பொருத்தமான ஆலோசனையும், உதவியும்யளிப்பார்கள்.

பொதுவாக, எல்லோரும் கொல்லைத் தோட்டங்களில் காய்கறி சாகுபடி செய்து அவரவர்களுக்குப் பிரியமான காய்கறிகளை பயிரிட்டு தேவையுள்ள பொழுது பறித்து உபயோகித்துக் கொள்ளலாம். கீரை தினுசுகள், முள்ளங்கி, வெண்டை, கொத்தவரை, அவரை இவை போன்றவைகள் கொல்லையில் அதிக சிரமமன்னியில் பயிரிடக்கூடியவை. வாழை, பப்பாளி, கொய்யா, மாதுளை இவைகளும் கொல்லைத் தோட்டங்களில் சீக்கிரத்தில் பலன் கொடுக்கக்கூடியவை. வீடுகளில், கழிவுபடுகிற ஜலத்தை சில சாதனங்களையமைத்து, இவைகளின் சாகுபடிக்கு பிரயோஜனப்படுத்திக்கொள்ளலாம். வீட்டு பக்கமும், தண்ணீர் தங்கி நின்று கெடுதல் செய்யாமலும், சுத்தமாகவும் வைத்துக்கொள்ள ஹேதுவாகும். காய்கறி ஜாஸ்தி கிடைத்தால், விற்பனை செய்து சிரமத்துக்கு பதில் லாபம் பெறலாம்.

கிணறு வசதியுள்ள புஞ்சைகளில், காய்கறிப் பயிர்களையும், பழ விருக்ஷங்களையும் விரிவாக சாகுபடி செய்து மேன்மையான பலன்களைப் பெற்று பிறருக்கு உதவும்படி செய்வது புகழத்தக்க அம்சமாகும். ஒட்டுமா, ஒட்டுக்கொய்யா, சபோடில்லா, பப்ளிமாஸ், வாழை போன்ற உயர்ந்த தினுசு பழ விருக்ஷங்களை உற்பத்தி செய்து ஜாஸ்தி வருமானம் பெறலாம். இந்த செடிகள் வளர்ந்து எக்கண்டமும் பரவ, சில வருஷங்கள் ஆகும். அதுவரையில் மத்தியிலுள்ள இடைவெளிகளில் தக்காளி, கத்தரி, வெண்டை, பரங்கி, பூஷணி, வெள்ளரி, கத்தரி, வெங்காயம், சர்க்கரைவள்ளி போன்ற பருவத்துக்குத்தகுந்த காய்கறி சாகுபடி செய்து மாகுலை அடையவழியுண்டு.

ஜாஸ்தியளவு காய்கறி உற்பத்தி செய்து சப்ளை செய்தால், கொஞ்சம் தான்யக் குறைவை சமாளிக்கலாம். காய்கறி, பழங்களை ஜாஸ்தி சாப்பிடுவதால், உடல் நலம் அடைந்து தேக ஆரோக்கியம் குறைவு அன்னியில் வசிக்க சாதனமாகும்.

புறம்போக்கு இடம், கிராமத்திலிருக்கிற காலி இடங்களில் இவைகளை அனுமதியின்பேரில் உற்சாகமுள்ளவர் பயிரிடலாம். காய்கறி விதைகளை விவசாய இலாகாதார் மூலம் வாங்கிக்கொள்ளலாம். எந்த மாதத்தில் எந்த காய்கறி பொருத்தமானதென்பது புதிதாய் தொடங்குகிறவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது. திட்டம் வைத்துக்கொண்டு பயிரிட்டால், எப்பொழுதும் சில வகை மாசூலை நல்ல நிலைமையில் பெற இடமுண்டு. கீரை தினுசுகள், முள்ளங்கி, வெண்டை, அடிக்கடி பயிர் செய்யலாம். குளிர்ச்சி காலத்திலும், ஜாஸ்தி மழை பெய்கிறபொழுதும் இவை செழிப்பமாக வளராது. மண் நல்ல புழுதியாக இருக்கவேண்டியது முதன்மையானது. மாசூலுக்கு தகுந்தபடி திரும்பவும் உரம் செய்து மறுமுறை பயிரிடுதல் திருப்திகரமான விளைவைக் கொடுக்கும்.

இத்துடன் பால் மாடுகள் பரிபாலிப்பதில், ஜாஸ்தி ஊக்கம் காட்டவேண்டும். கிராமங்களில் இவைகளை அபிவிருத்தி செய்ய நல்ல வசதிகள் இருக்கின்றன. சிலர் இதில் பிரயாசைப்பட்டால் பால் சப்ளையை அதிகப்படுத்தலாம். ஐக்கியக் கொள்கையில் பாடுபடுகிறவர்களுக்கு பணம் உதவி செய்து பால் வருமானத்தில் ஒரு பாகத்தை முதலுக்கு ஈடு செய்துகொள்ள மனப்பான்மையுள்ளவர்கள் இதைத் தொழிலாக நடத்தலாம். பால் உற்பத்தியை அதிகரிக்க திட்டம் தயாரிப்பது அவசியமாகும். நல்ல ஜாதி கோழிமுட்டைகளை வாங்கி அடை வைத்து, ஜாஸ்தி முட்டையிடுகிற கோழி இனங்களை கிராமங்களில் பரவச் செய்தும் முட்டை உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும். இதனாலும் தான்யக் குறைவை சமாளிக்கலாம்.

தேனீக்கள் வளர்ச்சியை, நாகரீக முறையில், இங்கு எல்லோரும் பழகிக் கொள்வது சிறந்த வழி. அதனால் ருசிகரமான தேனை எல்லோரும் உணவுப் பொருளாக உபயோகிக்கலாம். தற்காலம் தேன் அடையை பிழிந்து எடுத்து பெரும்பாலும் தேன் சேகரிக்கப்படுகிறது. அதனால் தேன் அடையிலிருக்கிற புழு, முட்டைகளின் ரசமும் தேனுடன் கலந்து விடுவதால் தேன் அதிக நாள் நிற்பதில்லை. ஆராய்ச்சி செய்து பார்த்ததில் பொந்து தேனீயை, வீடுகளிலும், தோட்டங்களிலும், தேக்கு, பிலா, பூவாசு பலகைகளில், கூண்டு தயாரித்து தேன் கூட்டத்தைப் பிடித்து முறையில் வைத்து பரிபாலித்தால், கூண்டுகளில் நன்றாக அபிவிர்த்தியடைந்து மேன்மையான தேனை புகழத்தக்க முறையில் எடுத்து உபயோகப்படுத்தலாமென்று பல இடங்களிலும், இங்கும் காட்டப்படுகின்றன. அதை எல்லாரும் பரவும்படி செய்ய ஒத்துழைக்கவேணும். அடையை பிழியாமல் சுழலும் யந்திரத்தைக்கொண்டு தேன் எடுக்கலாம். இதனால் தேன் பூச்சிகளின் ரத்தம் கலவாமலும், சுத்தமான தேனை மட்டும் கிரகிக்கலாம். இதனால் மெழுகினால் கட்டப்பட்ட தேன் அடையை சேதமன்னியில் தேனீக்கள் திரும்பவும் அதைக் கட்டி, தேனைச் சேகரம் செய்கிற வேலை குறைவுபடுகிறது. தேனீக்கள் கூட்டம் குறையாமல் அபிவிர்த்தி அடைய வழி ஏற்படுகிறது. தோட்டங்களிலும், விருக்ஷங்களின் மாசூலையும் அதிகரிக்க தேனீக்கள் சாதகமான வேலையைச் செய்கின்றன.

தேனீ வளர்த்தல்.

சா. தேவநேசன்.

பத்து நாட்களுக்குமுன் வடக்கு மூன்றும் வீதியிலிருக்கும் வாதராசா மரத்துப் பொந்திலிருந்த தேன் கூட்டை சில நண்பர்களும், நானும் நவீன முறைப்படி வளர்ப்பதற்கென்று தயாரிக்கப்பட்ட ஒரு மரப்பெட்டிக்கு மாற்றிக்கொண்டிருந்தோம். அவ்வீதியில் நடப்பவர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகள் சில என் காதில் விழுந்தன.

ஒருவர் மற்றவரைப் பார்த்து :—"என்ன செய்கிறார்கள் இவர்கள்? தேனீயை அழித்து தேன் எடுக்கிறார்களா?"

மற்றவர் :—"இல்லை; இவர்கள் தேனீக்களை அப்படியே கூட்டோடு பிடித்து வளர்க்கப்போகிறார்களாம்".

முதல்வர் :—"என்ன ஐயா, கேலியா பண்ணுகிறீர்கள்; குளவிபோல் கொட்டும் தேனீயைப் பிடிப்பதாவது, வளர்ப்பதாவது!"

மற்றவர் :—"நீங்கள் வேண்டுமென்றால் நின்று பாருங்களேன்".

முதல்வர் :—(சற்று நேரம் நாங்கள் தேன் ராட்டுகளை எடுத்து, ஈக்களை கைகளினால் அள்ளி, தயார் செய்த பெட்டிக்கு மாற்றும் காட்சியைக்கண்டு) "ஆமாம், என்ன ஆச்சரியம்; நான் முன்பு இது சாத்தியமென்று கேள்விகூடப்படவில்லையே".

ஆம், நமது புதுவை மக்கள் பலருக்குத் தேனீயைப் பிடித்து வளர்த்து, அதனால் அதிக பலனடையலாம் என்பது இன்னும் தெரியவே தெரியாது.

"தேனழிப்பது" என்பதுதான் பொதுவாக நமது தமிழ் நாட்டில் தேன் எடுக்கும் முறையை விவரிக்கும் சொல். அது மிகவும் பொருத்தமானதே. ஏனெனில் இப்புராதன முறையில் தேனீயும் அழிகிறது, தேனும் கெடுகிறது. தேனீயை நெருப்பினால் பொசுக்கிக் கொன்றுவிடுவார்கள். ராட்டுகளை அதில் உள்ள முட்டை புழுக்களோடு சேர்த்துப் பிழிந்து 'தேன்' எடுப்பார்கள். ஆனால் பொதுவாகக் கடையில் கிடைக்கும் இந்தத் தேன் அசுத்தம் நிறைந்தது. அதிக நாள் கெடாமலிருக்காது.

நவீன முறையில் இந்தக் கொலை பாதகமும், அழிவும் இல்லை. ஈக்களைப் பொசுக்கத் தேவையில்லை. ராட்டுகளைக் கசக்கத் தேவையில்லை. தேனை அசுசியாக்கத் தேவையில்லை. சந்திலும், பொந்திலுமுள்ள தேன் கூட்டை நவீன முறையில் பெட்டிகளில் வளர்த்து அவற்றிற்குச் சேதம் வராமல் காத்து, ராட்டுகள் கெடாமல் யந்திரத்தினுதவியால் தேனை மாத்திரம் அசுத்தமாக எடுத்து ஊழியமடைவதே நவீன முறை. இம்முறை இனிவரும் கட்டுரைகளில் படிப்படியாக விவரிக்கப்படும்.

சாரணீயக் குறிப்புகள்.

(*G. வெங்கடேசன், D. C. C. Organising Secretary*).

ஆகஸ்டுமீ 15ல சுதந்திரதினத்தன்று தலைநகரில் சாரணர்கள் அணிவகுப் பொன்று நடந்தது. புதுக்கோட்டை நகர் சாரணத்தொகுதிகளும் வெளியூர்களில் இருந்து சிலரும் அதில் கலந்துகொண்டனர். பழைய அரண்மனைச் சதுக்கத்தில் பட்டாள அணிவகுப்பு முடிந்தபின்னர் சாரண அணிவகுப்பு ஸமஸ்தான பிரதம சாரணராகிய மாட்சிமிக்க மன்னர்பிரானவர்கள் முன்னிலையில் தொடங்கியது. மன்னர் தம்பிமார்களும் விஜயம் செய்திருந்தனர். கௌன்ஸிலரும் புதிய மந்திரிகளும் மற்ற உத்தியோகஸ்தர்களும் பிரஸன்னமாயிருந்தனர்.

வழக்கம்போல் சாரணர் கொடிமரங்களுக்கு முன் அரைவட்டமாய் அணி வகுத்தனர். புதிய யூனியன் கொடியும், ஸமஸ்தான கொடியும் பறந்து விளங்கின. தமது சகோதரருடன் வந்த மன்னர்பிரானை ஸமஸ்தான சாரணக் காரியதரிசி G. வெங்கடேசன் வரவேற்று கொடிமரங்களுக்கிடையே அவர்கள் ஸ்தானத்திற் கிட்டுச் சென்றார். கொடிகளை வணங்கியபடி சாரணர் புதிய யூனியன் கொடிக்குத் தமது விசுவாசத்தை உறுதிகூறினர்.

அடுத்தபடி ஒரு விசேஷச் சடங்கு நடந்தது. மாட்சி மிக்க மன்னர்பிரான வர்கள் தமது சகோதரர் மகா-ள-ள-ஸ்ரீ ராஜகுமார் ராதாகிருஷ்ண தொண்டமான் துரைராஜா அவர்களை 'டெபுடி பிரதம சாரணர்' ஆகக் களிகூர்ந்து நியமித் திருப்பதாக ஸமஸ்தான சாரண சங்கக் காரியதரிசி பிரகடனம் செய்தபின் துரை ராஜா அவர்கள் மன்னர்பிரான் முன்னிலையில் சாரண வாக்குறுதியைச் செய்து தம் புதிய பதவியை ஏற்றார். பின் இருவருமாய்த் தொகுதிகளைப் பார்வை யிட்டனர்.

திருமயம் தாலூகா வட்டாரத்தில் நல்ல ஸேவை செய்ததைப்பாராட்டி ஸ்ரீ ராமகோவிந்தன் செட்டியாருக்கு மேன்மை தங்கிய இந்தியப்பிரதம சாரணர் அளித்த யோக்கியதை பதக்கத்தை (Medal of Merit) அவருக்கு வழங்கும்படி காரியதரிசி மாட்சிமிக்க மன்னர்பிரான் அவர்களை வேண்டிக்கொண்டார். ஸ்ரீ செட்டியாருக்கு மன்னர்பிரான் அவர்கள் தமது கரங்களால் பதக்கத்தைச் சூட்டி வாழ்த்துக்கூறினர்.

ஸ்ரீ வெங்கடேசன் சாரணர் சார்பாக மன்னர்பிரானுக்கு விசுவாச உறுதிப் பிரமாணம் கூறி நன்றி தெரிவித்தபின் சாரணர்களின் ஜயகோஷங்களுக்கிடையே மகிழ்ச்சியுடன் மன்னர் மாளிகைக்குத் திரும்பினார். சாரணர் மீட்டும் ஜய கோஷத்தால் தமது புதிய டெபுடி பிரதம சாரணருக்கு தமது நன்றிமிக்க மகிழ்ச்சியைத் தெரிவித்தபின் அவரும் திரும்பினார். அன்று சாரணர்களிடையே கண்டது என்றுமில்லாத பெரும் குதூகலம். மற்ற தலைநகர் விழாக்களிலும் ஊர்வலங்களிலும் சாரணர் கலந்துகொண்டு சேவை புரிந்தனர்.

வெளியூர்களில் சுதந்திர தினம்: மிதிலைப்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி, பி. அளகாபுரி, கோனாபட்டு, திருமயம், ராமச்சந்திரபுரம், ராயவரம், அரிமளம் முதலிய நகரங்களிலும் சாரணத் தொகுதிகள் சுதந்திர தினத்தை தாமும் கொண்டாடி அவ்வூர்க் கொண்டாட்டங்களிலும் பங்கு கொண்டு சேவைபுரிந்தனர்.

16—8—47 இரவு, பழைய அரண்மனைச்சதுக்கத்தில் தலைநகர் காலேஜ், துரோணாரோவர் குழு, ஸ்ரீ ராஜகோபாலரோவர் குழு, மூன்று தொகுதிகளும் ஒரு தீவட்ட களியாட்டம் நடத்தினர். அதற்கு ராஜகுமார் ஸ்ரீ ராதாகிருஷ்ண தொண்டைமான் துரைராஜா அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தனர். இதன் விவரம் ஒரு சாரணரால் தரப்பட்டுளது. சாரணர் ஆட்டங்களை மெச்சி பப்ளிஸிடி ஆபீஸர் அவர்கள் பரிசுத் தொகைகள் வழங்கினர்.

மற்றச் செய்திகள்.—குளத்தூர் தாலூகா, ஆவூரில் ஆகஸ்டு 13, 14, 15 தேதிகளில் நடந்த ஆவூர் அர்ச் பெரியநாயகி தேவாலயத்தின் இரண்டாவது நூற்றாண்டு மகோத்ஸவத்தில் வயலோகம் சர்ச்சு சாரணத் தொகுதி செய்த சேவை பெரிதும் பாராட்டப்பட்டது.

நான் கண்ட சாரணக் களியாட்டங்கள்.

(By S. P. G., A. R. S. L. Drona Rovers).

இந்தியா சுதந்திரம் பெற்ற நன்னாளின் மறுநாள் இரவு சுமார் 7-மணியிருக்கலாம், நான் கீழராஜவீதி வழியே கடைத்தெருவை அடைந்தேன். எங்குபார்த்தாலும் குதூகலம், கொண்டாட்டம், தேஜோமயம், நகரே தேவலோகம்போல் விளங்கிற்று. என்னையே மறந்து ஒன்றும் புரியாமல் என் வழியே சென்றுகொண்டிருக்கையில் அரண்மனை ஆசாரவாயிலை நோக்கினேன். பழைய அரண்மனைச் சதுக்கத்தில் ஒரு சிறு கூட்டம், பட்டப்பகல்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் மின்சார விளக்குத் தோரணங்களினடயில் தென்பட்டது. அங்கு சென்றேன். பல சாரணச் சிறுவர்கள் தீ வட்டக் களியாட்டங்களுக்காகத் தீ வளர்த்துக்கொண்டிருந்தார்கள். யாவரும் யாரையோ எதிர்பார்ப்பதுபோல் தென்பட்டது. நானும் கவனித்துக் கொண்டே நின்றேன் சரியாக 7-30 மணிக்கு அரண்மனை மோட்டார் வண்டி ஒன்று வந்து நின்றது. அதினின்றும் மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்களின் சகோதரர் ராஜ்குமார் ராதாகிருஷ்ணத் தொண்டமான் அவர்கள் இறங்கினார்கள் சாரண இயக்கத்தின் நிர்வாக காரியதரிசி ஸ்ரீ G. வெங்கடேசன், அவரை வரவேற்ற பின் அன்னார் தீ வட்டக் களியாட்டத்தை ஆரம்பித்துவைத்தார்கள்.

தீ வட்டக் களியாட்டம் ராஜகோபாலத் திரிசாரணர்களின் கடவுள் துதியுடனும் தேசிய கீதத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. பல இளைஞர்களும், வாலிபர்களும், வயதுவந்த திரிசாரணர்களும் அதில் பங்கெடுத்துக்கொண்டார்கள். முக்கியமாக இக்களியாட்டங்களில் ராஜகோபால திரிசாரணர் குழுவின் அரிய செயல்கள் மேன்மையாய் விளங்கின எனலாம். திரிசாரணர் லெக்ஷ்மண நாயுடுவின் நடிப்புத்திறமை மிகவும் மெச்சத்தகுந்தது. அன்னார் சில கனவான்கள் பிரசங்கம் செய்வதுபோல் தம் குரலை மாற்றி பாவத்தோடு பேசியதும், வித்தையாடிபோலும், சகிப்பாட்டு கோஷ்டியுடனும், பல கூத்து முதலியன நடித்துக்

காட்டியது எல்லோராலும் பாராட்டப்பட்டது. இக்களியாட்டத்தில் காலேஜ் சாரணர்களும், துரோணத்திரிசாரணர்களும் பங்கு கொண்டனர். வந்திருந்த பொதுஜனங்களும் அக்கிராசனரான டெபுடி பிரதம சாரணரும் இக்களியாட்டங்களை குதூகலத்துடன் கண்டுகளித்தார்கள்.

பொழுதுபோனதே தெரியவில்லை. இரவு 9-30 மணிக்கு ஸ்ரீ வெங்கடேசன் வந்திருந்தவர்களுக்கு வந்தனோபசாரம் கூறினார். அதன்பின்னர் விளம்பர இலாகா உத்தியோகஸ்தரான ஸ்ரீ K. நாகராஜ அய்யர் களியாட்டங்களை மெச்சிப் பேசி ராஜகோபால திரிசாரணர் குழுவுக்கும், கல்லூரி சாரணர் படைக்கும், துரோணத் திரிசாரணர் குழுவுக்கும் ஈ-தர்பார் அவர்களால் சுதந்திர தினக் கொண்டாட்டத்தையொட்டி களிகூர்ந்தளிக்கப்பட்ட பரிசுகளை வழங்கி, திரிசாரணர் லெக்ஷ்மண நாயுடுவுக்கும் அவரது நடிப்புத் திறமைக்காகப் பிரத்தியேகப் பரிசொன்று அளித்தார்கள். பின்னர் களியாட்டங்கள் ராஜ வாழ்த்துடன் இனிது முடிந்தன.

மற்ற பத்திரிகை குறிப்புகள்,

மாங்கொட்டைப் பருப்பு கால் நடைகளுக்கு ஏற்ற உணவு.

ஆராய்ச்சியின் மூலம் மாங்கொட்டையின் பருப்பு கால் நடைகளுக்கு ஏற்ற உணவென்றும் இதனால் ஓரளவு நாட்டிலுள்ள கால் நடைகளின் உணவு நெருக்கடியை சமாளிக்கலாமென்று தெரிகிறது.

கால் நடைகளின் உணவுகளில் மாங்கொட்டையின் பருப்புகளை நசுக்கி கலந்து கொடுக்கலாம். இவ்விதம் மூன்று சேர்கள் வரை இப்பருப்புச் சத்துக்களைச்சேர்த்துக் கொடுக்கலாம். இதின் ருசியை கால் நடைகள் தெரிந்து கொள்ளுவதற்கு மூன்று வாரங்கள் செல்கிறதென்றும் அதன் பிறகு இதை அவைகள் சுவைக்கின்றனவென்றும் ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது. இந்தப் பருப்பு சத்து கால் நடைகளுக்குச் சேருவதால் அவைகள் அதிகப்படியான கனதியும், ஆரோக்கியமான தேக புஷ்டியையும் பெறுகின்றன.

(Indian Farming Vol. VIII No. I).

* * * * *

உலக உணவு நெருக்கடி பல ஆண்டுகளுக்கு நீடிக்கலாம்.

உலக உணவு நெருக்கடியானது இன்னும் நாலைந்து ஆண்டுகளுக்கு நீடிக்கலாம். 1946—47-ம் வருஷத்தில் பாக்கியிருக்கும் மாதங்களுக்கு சராசரி மாசூல் பெற்றாலும் 1947-ம் வருஷத்திய அறுவடைக் காலம் முடியும் வரையிலுமாவது உணவு நெருக்கடி நீடித்திருக்கும். உணவு விவசாய ஸ்தாபனங்களின், டைரக்டர் ஜெனரலான ஸர் ஜான் பாய்ட் ஆர் எவ்விதத்திலும் உலகத்தில் உணவு நெருக்கடியானது அடுத்த நாலைந்து வருஷங்களுக்கு நீடிக்குமென்றும், அந்தக் காலத்திற்கு ஓர் சர்வதேச ஏற்பாடு அதைத் தவிர்க்க ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

(Indian Farming Vol. VIII No. 2 p. 99).

நல்ல மாடுகள் தேவை.

"நல்ல மாடுகள் பாலுக்கும் உழவுக்கும் தேவையாகயிருக்கின்றன. கால்நடை விருத்தியைப்பற்றிப் பேசுங்கால் நகரங்களில் வசிப்போர்கள் பால் ஸப்ளையைப்பெருக்கவேண்டுவது ஒன்றுதான் நாம் கவனிக்கவேண்டியது என்கிறார்கள். கிராம வாசிகளோ உழவின் அவசியமும் அதற்கு சமானம் என்று வற்புறுத்துகிறார்கள். இந்நாட்டில் எந்த திட்டமும் வெகு பெரும்பான்மையோருக்கு அதிபிரயோஜனமாக இருக்கவேண்டுமென்றால் இவ்விரண்டு லக்ஷியங்களிலும் நாம் கவனத்தைச் செலுத்தவேண்டும். நகரங்களுக்கு வேண்டிய பால் வழங்குவதற்காக அதிகப்பால் ராசியுள்ள மாடுகளை நாம் விருத்தி செய்யவேண்டியதோடு பால் உழவு ஆக இரண்டு உபயோகங்களுக்கு ஏற்ற மாடுகளை கிராம உபயோகத்திற்காக நாம் விருத்தி செய்யவேண்டும்."

ஸ்தாபிக்கப்போகும் பிரத்தியேகப் பண்ணைகளை சாஸ்திர ஆராய்ச்சியும் சாஸ்திரிய முறையில் வம்சவிருத்தி செய்வதும் அவசியம் என்று வற்புறுத்துகிறார் டாக்டர் ராஜேந்திர பிரஸாத் அவர்கள். "ஸர்க்காரால் நடத்தப்படும் பிரத்தியேகப்பண்ணைகள் இருக்கின்றனவென்று நம்புகிறேன். அவைகளைப் பார்க்கவும், அவைகளின் வேலையை கவனிக்கவும் இது வரை எனக்கு ஸாத்தியமில்லாமலிருக்கிறது. நாளடைவில் அவைகளைப் பார்க்கவேணுமென்று விரும்புகிறேன். அந்தப் பண்ணைகளில் செய்யும் சோதனைகளின் முடிவுகளை யாவரும் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். அந்த மாடுகளையே உபயோகிக்கும்படி செய்தால் யாவரும் அறிந்துகொள்ள முடியும். ஆகையால் இச்சங்கத்தில் வேலையை தொடர்ந்து நடத்தி டில்லி நகராருக்கு மட்டுமல்லாமல், இன்னும் விரிவான அளவில் தேசத்திலுள்ள நாட்டுப்புறங்களிலும் நகரத்தின் சேவைகளை விருத்தி செய்வது அவசியமாகும்."

(Indian Farming Vol. VIII No. 1).

கெஜெட்டுச் செய்திகள்.

ஈ-தர்பார் அவர்களின் D. Dis. No. 12046 of 47, dated 19—8—47 விளம்பரம்.

அனுமதிச் சீட்டு—பிரஞ்சு இந்தோ சைனாவுக்குச் செல்ல அனுமதிச்சீட்டு—கொடுத்தலின் விவரம்.

இதனால் பொது ஜனங்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவெனில், 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15உயிலிருந்து திருவனந்தபுரம் ரெஸிடென்ஸி ஆபீஸில் அனுமதிச் சீட்டுக் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். ஸமஸ்தான வாசிகள் அனுமதிச் சீட்டுகள் கோரினால் இனிமேல் அவைகள் மதராஸ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும். அடியில்கண்ட விலாஸத்திற்குஎழுதவேண்டும். அதை ஒத்து மேற்படி தேதியிலிருந்து கோரப்படும் அனுமதிச் சீட்டுகளை ஸமஸ்தான வாசிகள் மதராஸ் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

விலாஸம் :—

ஹோம் டிபார்ட்டுமேண்டு
மதராஸ் கவர்ன்மெண்டு,
ஸெயின்ட்ஜியார்ஜ்கோட்டை
மதராஸ்.

ஸ்தாவர எண்ணெய் பதார்த்தங்களின் கட்டுப்பாட்டு விதிகளின்படி எவ்விதம் அதை வியாபாரம் செய்வோர் கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், அக்கணக்குகளையும், சரக்குகளையும் எந்தெந்த அதிகாரிகள் பரிசோதனை செய்யலாமென்பதையும், எவ்விதம் சரக்குகளை விற்பனை செய்யவேண்டுமென்பதைப்பற்றியும், தன் கையிருப்புகளைப்பற்றிய கணக்குகளை கண்ட்ரோலருக்கு எவ்விதம் எப்பொழுது அனுப்பப்படவேண்டுமென்பதைப் பற்றியும், ஈ-தர்பார் அவர்களின் உத்தரவின்றி ஸமஸ்தானத்திற்கு வெளியிலுள்ளவர்களுக்கு சில்லரை வியாபாரம் செய்யக்கூடாதென்பதைப் பற்றியும் வியாபாரிகள் அவ்வப்போது கண்ட்ரோலரால் அனுப்பப்படும் உத்தரவுகளின்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதையும் விளக்கி ஸ்தாவர எண்ணெய்ப் பதார்த்தங்களின் கண்ட்ரோலர் விளம்பரம் ஒன்று விடுத்திருக்கிறார்கள்.

இதைத் தவிர ஸ்தாவர எண்ணெய்ப் பதார்த்தங்கள் வியாபாரம் செய்பவர்கள் மேற்படி பதார்த்தங்கள் சம்பந்தமான 1946-ம் வருஷத்திய கட்டுப்பாட்டு விதிகளை அனுசரிக்கவேண்டுமென்றும் இனிமேல் கண்ட்ரோலரால் குறிப்பிடப் போகும் தேதிமுதல் மேற்படி எண்ணெய் பதார்த்தங்களை அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளைத் தவிர மற்றவர்கள் விற்கக்கூடாதென்றும், கூடிய சீக்கிரம் கண்ட்ரோலர் ஓர் தேதியை குறிப்பிடப்போவதால் அதற்குள் இந்த எண்ணெய் வியாபாரத்திலீடுபட்டிருப்பவர்கள் அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளாகப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றும் ஓர் விளம்பரம் வெளியிட்டுள்ளார்கள்.

மேற்கண்ட இரு விளம்பரங்களையும் 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 20உ பிரசுரமாகியிருக்கும் ஸமஸ்தான கெஜெட் மூன்றாவது பாகம் 205-ம் பக்கத்தில் காணலாம்.

* * * *

ஸமஸ்தானத்தில் இவ்வருஷத்திய முக்தியார் வக்கீல்கள் பரீக்ஷை சம்பந்தமாக விதிகளும், பரீக்ஷைக் கட்டணத் தொகையும், அதை எப்பொழுது செலுத்தப் படவேண்டுமென்பதைப் பற்றியும் பரீக்ஷை நடக்கும் தேதிகளைப்பற்றிய விவரமும் சீப் கோர்ட்டு ரிஜிஸ்தரார் ஓர் நோட்டீஸ் மூலம் ஸமஸ்தான கெஜெட் 20—8—47 பிரசுரத்தில் 4-வது பாகம் 45-ம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்கள்.

* * * *

ஈ-தர்பார் அவர்கள் விளம்பரப்படுத்துவது என்னவென்றால்,

போலிக்கார்டுகளையும், இறந்தவர்களுடைய கார்டுகளையும், அருகிலுள்ள ரேஷனாபீஸில் தாமாகவே கொடுத்துவிடுமாறு, ஈ-தர்பாரவர்கள் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தும், அம்மாதிரி கார்டுகளை இன்னும் ரேஷன் வாங்குவதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. மேலும் சிலர், பங்கிட்டு உணவுதானியங்களை ஸ்டாக்கு வைத்துக்கொண்டு ரேஷன் கார்டுகளுக்கு ரேஷன் வாங்கி வருவதாகவும் ஈ-தர்பாரவர்கள் அறிகிறார்கள். தற்பொழுது ஏற்பட்டிருக்கும் உணவுப்பொருள் நெருக்கடியில், அவ்வாறு சட்ட விரோதமாக ரேஷன் வாங்குவதைத்தடுப்பது மெத்த அவசியமாகையால், போலிக்கார்டுகளையோ, அல்லது சட்ட விரோதமாக ரேஷன் வாங்குவதையோ, கண்டுபிடிக்க சரியான தவகல் கொடுப்பவர்களுக்கு ரூ 5-இனும் கொடுக்கப்படுமென்று ஈ-தர்பாரவர்கள் களிகூர்ந்து அறிவிக்கிறார்கள்.

Sri Brihadambal State Press, Pudukkottai. 750—15-9-47.

Published by the Publicity Officer, Pudukkottai State. Printed at the Sri Brihadamba State Press, Pudukkottai. All communications should be addressed to the Publicity Officer, Pudukkottai.